بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ

# AHMADIYYA MOULAVI'S ANSWER TO THE QUESTIONS

# அஹ்மதியா மௌலவிகள் பதில் கூறுவீர்களா?

**ஆதாமுடைய மக்களே எனது வசனங்களை உங்களுக்கு விளக்கித்தருகின்ற தூதர்கள் உங்களிடத்தில் வருவார்கள் (7-36) என்றும், அல்லாஹ்வுக்கும் தூதர் (ஸ)வுக்கும் கீழ்படிந்து பரிபூரணமாக வாழ்கின்றோர்களுக்கு நபிமார்கள், ஸித்தீகின்கள், ஷீ ஹதாக்கள், ஸாலிஹின்கள் என்ற பதவிகள் அல்லாஹ் வழங்குவான் (4-69) என்றும் உங்களிடத்தில் இருக்கும் வேதத்தையும், ஞானத்தையும் மெய்ப்பிக்கும் தூதர்கள் வந்தால் அவர் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் (3-82) என்றும் திட்டவட்டமாக திருகுர்ஆன் கூறுகின்றது.** 14-ம் நூற்றாண்டில் இறைதூதராக அவதரித்த ஹஸ்ரத் அஹ்மது (அ) அவர்களின் உண்மைக்கு சான்றாக அஹ்மதியா மௌலவிகள் தங்களது வெளியீடுகளிலும், சொற்பொழிவுகளிலும் மேல் கூறிய குர்-ஆன் வசனங்களையல்லவா சுட்டிக்காட்டுவதும் பிரச்சாரம் செய்வதும், அப்படியென்றால் அந்த அஹ்மதியா மௌலவிகளிடம் சில கேள்விகள் எழுப்புகின்றோம். அதற்கு சரியானதும் நேர்மையானதுமான பதில் கூற வேண்டியது அவர்களுக்கு தவிர்க்க இயலாத கடமையாகும்.

1) ஹிஜ்ரா 14-ம் நூற்றாண்டில் முஜத்தீதும் இமாம் மஹ்தியும் மஸீஹும் நபியும் என்று ஹஸ்ரத் அஹ்மது(அ) வாதமிட்டது மேல்க் கூறிய குர்-ஆன் வசனத்தின் அடிப்படையிலல்லவா? என்றால், இந்த 15-ம் நூற்றாண்டிலும் முஜத்தீதும் இறை தூதரும் நபியுமாக தோன்றியிருக்கின்ற முனீர் அஹ்மது அஸிம் சாஹிபின் உண்மைக்கும், அவரை ஏற்றுக்கொள்வதற்கும் அதே திருமறை வசனங்கள் போதுமானதல்லவா?

2) ஒவ்வொரு நூற்றாண்டின் தலைப்பிலும் இஸ்லாமதத்தை தூய்மைப்படுத்த ஒவ்வொரு முஜத்தீதுகளை அல்லாஹ் நியமிப்பான் என்று நபி(ஸ) கூறியிருந்தார்கள். திருமறை வசனங்களை ஊக்குவிக்கும் அந்த திரு நபி மொழியை நிரூபிக்கும் வகையில் 1-ம் நூற்றாண்டிருந்து 14-ம் நூற்றாண்டு வரையிலும் இறைவனே நேரடியாக ஒவ்வொரு தூதர்களை அனுப்பி வைத்தான். அப்படியென்றால் இந்த 15-ம் நூற்றாண்டிலும் இறைவனால் நியமிக்க கூடிய ஒரு தூதர் வரவேண்டுமல்லவா? அது அவசியமல்லவா?

3) ஒவ்வொரு நூற்றாண்டிலும் இறைவனால் அனுப்பப்படுகின்ற முஜத்தீதுகள் தோன்றுவார்கள் என்ற நபி மொழியில் அஹ்மதிகளுக்கு இப்போது நம்பிக்கை இருக்கின்றதா? இருந்தால் எக்காலவும் அது சர்ச்சைக்குரிய காரியமல்லவா? அப்போது இந்த 15-ம் நூற்றாண்டை மட்டும் அதில் இருந்து விலக்கி கொள்வது சரியா?

4) ஹஸ்ரத் அஹ்மது(அ) ஆயிரம் வருடங்களுக்கு முஜத்தீது ஆவார் என்ற வாதம் மௌலவிகளாகிய உங்களுக்கு இருக்கின்றனதா? என்றால் ஒவ்வொரு நூற்றாண்டிலும் இறைவனே நேரடியாக நியமிக்கின்ற முஜத்தீதுகள் வருவார்கள் என்று எதற்காக மக்களிடத்தில் பிரச்சாரம் செய்து வந்தீர்கள்? மொத்தமாக ஆயிரம் வருடங்களுடைய கணக்கை மட்டும் தெரிவித்திருந்தாலே போதுமே, ஒவ்வொரு நூற்றாண்டையும் மக்களிடத்தில் ஞாபகப்படுத்த தேவையென்ன?.

5) வெளிப்பாடுகளின் வாசல்கள் அடைக்கப்படவில்லை என்றும் அல்லாஹ் தான் விரும்புகின்றோர்களுக்கு ஜீப்ரில்(அ) மூலமாக வெளிப்பாடுகளை இறக்குவான் என்றும் ஹஸ்ரத் அஹ்மது(அ) சந்தேகத்திற்கு இடமின்றி கூறும்போது, இக்காலகட்டத்தில் இறைவன் என்னை தூதராகவும், நபியாகவும் தேர்ந்தெடுத்திருக்கின்றான் என்று வாதமிடுகின்ற ஒருவரின் வார்த்தைக்கு செவிசாய்க்கவேண்டியது அஹ்மதிகள் கடமையல்லவா?

6) அல்லாஹ் மீது இட்டுகட்டி பொய்க்கூறுபவரின் நாடிநரம்பை அறுத்து விடுவேன் என்றும், அது போன்ற நபர்களை அல்லாஹ்வே கவனித்துக் கொள்வான் என்றும் குர்-ஆன் திட்டவட்டமாக கூறும் போது அல்லாஹ்வால் அனுப்பப்பட்டிருக்கும் நபி என்று வாதமிடுகின்ற நபர்களை உதாசீனப்படுத்தி தூக்கி வீசுவது நியாயமா? அஹ்மதியா நம்பிக்கையாளர்களுக்கு அதற்கு முடியுமா?

7) குர்-ஆனும் திருசுன்னத்தும் இருப்பதால் இனி ஒரு நபியோ இறைதூதரோ தேவையில்லை என்று நூறுகோடிக்கு மேற்பட்ட இன்றைய முஸ்லீம்களின் நம்பிக்கையும், மக்களால் தேர்ந்தெடுத்த ஒரு தலைவர் இருப்பதால் இனி ஒரு முஜத்தீத்தோ நபியோ வரவேண்டிய தேவையில்லை என்று சுமார் இரண்டு கோடி வருகின்ற இன்றைய அஹ்மதிகளின் நம்பிக்கையும் அடிப்படையாக ஒன்றல்லவா?

8) மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற ஒரு கலீஃபா இருப்பதால் இறைவன் நேரடியாக நியமிக்கின்ற ஒரு தூதரின் தேவையில்லை என்ற மௌலவிகளின் விதண்டா வாதத்திற்கு தகுந்த சான்றுகளை அளிக்க முடியுமா? உங்களின் இந்த வாதம் திரு குர்-ஆனுக்கும் திரு ஹதீஸுக்கும் இமாம் மஹ்தியின் இனிய போதனைகளுக்கும் கேடுவிளைவிப்பதல்லவா?

9) சுறத்துல் அன்நூறில் நம்பிக்கை கொண்டோர்களுக்கு அல்லாஹ் தந்த கிலாஃபத் வாக்குறுதியை சற்று கவனியுங்கள். அது அல்லாஹ்வே நேரடியாக நியமிக்கின்ற கலீஃபாவை பற்றியதா? இல்லை சபையால் தேர்ந்தெடுக்கப்படுகின்ற கலீஃபாவை பற்றியதா?

10) நபி(ஸ)வுக்கு முன்னவோ பின்னவோ மனிதர்களால் தேர்ந்தெடுத்த கலீஃபாவை பற்றிய விவரங்களை திரு-குர் ஆனில் காணமுடியுமா? அவ்வாறு இருக்கின்றதுயென்றால் உங்களால் அது காட்ட இயலுமா?

11) ஆதம் நபி(அ) இறைவனால் நேரடியாக நியமிக்கப்பட்ட கலீஃபாவோ இல்லை, மனித கரங்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட கலீஃபாவோ? மக்களால் நியமிக்கப்படுகின்ற கலீஃபாக்களைப் பற்றிய விவரங்கள் திருமறையில் எங்கும் கூறப்படாதிருக்கும் போது, அந்த பதவியில் தொடர்கின்ற நபரை இறைவனின் கலீஃபா என்று சொல்லமுடிமா? அது குர்-ஆன் போதனைகளுக்கு எதிரல்லவா?.

12) இறைவனிடமிருந்து வந்திருக்கின்ற கலீஃபத்துல்லாஹ் ''நான் இறைவன் நியமித்த கலீஃபா'' என்று கூறும் போது அவரை ஏற்றுக்கொள்ளாமல் மக்களால் தேர்ந்தெடுத்திருக்கின்ற கலீஃபாவை பின்பற்றுவது, முழுமையான கலீஃபா சீர்கல்லவா? மனிதர்களால் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்ற கலீஃபாவுக்கு நான் இறைவனின் கலீஃபா என்று வாதம் இருக்கின்றதா? இருக்கின்றது என்றால் அதை உலகமக்களிடம் கூறவேண்டியது நம்பிக்கையாளர்களோ அல்லது கலீஃபாவோ? கலீஃபா என்றால் அவர் கூறுவது நான் கலீஃபத்துல் மஸீஹ் அதாவது மஸீஹின் கலீஃபா என்றல்லவா?

13) இறைவனே நேரடியாக பூவுலகில் நியமிக்கின்ற கலீஃபாவை ஏற்றுகொள்ள மறுப்பது குர்-ஆன் பாடங்களின் அடிப்படையில் பார்த்தால் அது மலக்கின் செயலோ இல்லை இப்லீசின் செயலோ? ஒரு முஹ்மினி-னுக்கு அறிவும், அழகும் மலக்கின் செயலை பின்பற்றுவதா? இல்லை, இப்லீசின் செயலை பின்பற்றுவதா?

14) மக்களால் தேர்ந்தெடுத்திருக்கின்ற அஹ்மதியா கலீஃபா இருப்பதால் இனி இறைதூதரின் தேவையில்லை என்றால் நேற்றையநாள் வரையிலும் சுன்னிகளோடும் மற்றும் இஸ்லாமத பிரிவினரோடும் குர்-ஆன் ஹதிஸீன் அடிப்படையில் எப்போதுவேண்டுமென்றாலும் இறைதூதர்கள் தோன்றாலம் என்று கூறியது எதற்காக? அக்கூற்று தவறா?

15) இந்த நூற்றாண்டில் இறைவனால் அனுப்பப்பட்ட கலீஃபத்துல்லாஹ் என்று வாதமிட்டிருக்கின்ற ஹஸ்ரத் முனீர் அஹ்மது ஆஸீம்(அ) அவர்கள் தனக்கு இறைவனிடமிருந்து கிடைக்கும் வெளிப்பாடுகளை அனுதினம் உலகமக்களை தெரியப்படுத்தி வருகிறார். ஆனால் மக்களால் தேர்ந்தெடுத்திருக்கின்ற இன்றைய அஹ்மதியா கலீஃபாவுக்கு இறைவெளிப்பாடுகள் கிடைக்கின்றதா? கிடைக்கின்றதென்றால் அதை உலகமக்களிடம் தெரிவிக்காமல் மறைத்துக்கொள்ள காரணம் என்ன? மறைத்துக் கொள்வது ஒரு இறை கலீஃபாவுக்கு சேர்ந்ததா?

16) பொய் கூறுபவர்களின் மேல் இறைவனின் சாபம் உண்டு என்று திருமறை கூறும்போது, இந்தியாவில் எட்டுகோடி அஹ்மதிகள் என்றும் உலக அளவில் பதினெட்டு கோடி அஹ்மதிகள் என்றும் (நாயிப் நாசிர் ஆலா முஹமது உமர் சாஹிப் H.A. காதியான் அவர்கள் ஒரு பேட்டியில் உலக அளவில் அஹ்மதிகள் எண்ணிக்கை 18 கோட்டி என்றும் இந்தியாவில் எட்டுகோடி என்றும் கூறியிருந்தார்). பொய் பிரச்சாரம் செய்துவரும் அஹ்மதிகளின் மேல் இறை சாபம் இல்ல என்று உங்களால் கூற முடியுமா? இல்லையென்றால் அந்த குர்-ஆன் வசனம் தவறானதா?

17) உலக அளவில் 18-கோடி அஹ்மதிகள் என்றும் இந்தியாவில் 8 கோடி அஹ்மதிகள் என்றும் பொய் பிரசாரம் செய்து வருகின்ற மௌலவிகளாகிய உங்களுக்கு உலக அளவில் 4-கோடி அஹ்மதிகளின் எண்ணிக்கையும் இந்தியாவில் 5 லட்சம் அஹ்மதிகளின் எண்ணிக்கையும் ஆதாரத்தின் அடிப்படையில் காட்ட இயலுமா?

18) வானத்தின் கீழில் அவர்களின் உலமாக்கள் மிக கெட்ட ஜந்துக்களாக இருப்பார்கள் என்று 1400 வருடங்களுக்கு முன்னவே நபி(ஸ) தீர்க்கதரிசனம் செய்திருந்தார்கள். ''அவர்களின் உலமாக்கள்'' என்று நபி(ஸ) குறிப்பிட்டது அன்னாருடைய சமுதாயத்தை சார்ந்த இஸ்லாமிக உலமாக்களை அல்லவா? அப்படியென்றால் அந்த உலமாக்கள் வகுப்பில் அஹ்மதியா உலமாக்களும் சேரவேண்டுமல்லவா? இல்லை என்றால் அஹ்மதிய உலமாக்கள் நபி(ஸ) வுடைய சமுதாயத்தை சார்ந்த இஸ்லாமிக உலமாக்கள் அல்லை என்று கூற உங்களால் முடியுமா?.

19) ஒவ்வொரு நூற்றாண்டிலும் தோன்றுகின்ற முஜத்தீதுகள் ஒரு சர்ச்சைக்குரிய விஷயமாக இருக்கும் போது, ஆன்மீகத்தை சார்ந்த அவ்விஷயத்தை கருத்தின் அடிப்படையில் மோதி கொள்ளாமல் பயந்து ஓடி ஒளிப்பது சரியா? இந்த பயத்திற்கு காரணம் இன்றைய உங்கள் நம்பிக்கைக்கு எதிராக குர்-ஆன், ஹதீஸ், அஹ்மது (அ) மின் போதனைகள் இருப்பதால் அல்லவா?

20) பூவுலகில் ஆன்மீக ஆட்சிக்காக இறைவனே நேரடியாக ஒரு தூதரை ஏற்படுத்தினால் பிறகு இறையாட்சியை பாரினில் மலர செய்யவைப்பதற்கு தகுந்தவர் இறைவனால் அனுப்பப்பட்டவரோ அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவரோ? கூறுங்கள், மௌலவிகளே பதில் கூறுங்கள்.

**Proof Reader**
**Azim Ahmad**
**Sadr Sahibul Faraj**
**Kerala/ TamilNadu**
**E-mail: sahihazisulsat@gmail.com**
**Cell: 09789180817**

**Published by**
**Jamaat Ul-Sahih Al Islam**
**Dawa Department**
**Tamil Nadu. (Regd.No. A/693)**
**Web: www.jamaat-ul-sahih-al-islam.com**